2003 மே 8]

408—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

***6055—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கடந்த 5 ஆண்டுகளாக காலியாகவுள்ள பணியிடங்களை பணி மூப்பு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் திருத்திய ஆள் பலப் பட்டியலைவிட கூடுதலாகப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, திருத்திய ஆள்பலப் பட்டியலின்படி காலியிடங்கள் ஏற்படும்போது பணி மூப்பு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு வருடத்திற்கு முன்பாக இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். திருத்திய விதிகள்படி அதிகமாக ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு முன்பாக காலியிடங்கள் இருந்திருக்கக்கூடும். அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. Representation சரியாக இல்லை என்ற ஒரு தகவல் வந்திருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் நேரடியாக இதை ஆய்ந்து இருக்கின்ற இடங்களிலே, அந்த இடங்களைக் கணக்கிட்டு அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பணியிடங்களை வழங்குவதற்கு முயற்சி எடுப்பாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை அவர்கள் சொன்ன தகவல் சரியாக இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பணியிடம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.